# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 38. பொதுப் பேருந்துக்களை பயன்படுத்துதல்

**விளக்கம்:** கோவிட் -19ற்கு எதிர்வினையாற்றும் தற்போதைய சூழ்நிலையில், பொதுப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை யானது அப்பயணிகளுக்கு இடையில் போதிய உடல் இடைவெளியினைப் பேணுவதற்கு ஏற்றவகையில் மட்டுப்படுத்தப்படுவதுடன் பிற பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள் /வழிகாட்டல்கள் உரிமையாளர் / சாரதி / நடத்துனர் / பிரதான பேருந்து நிலைய ஒருங்கிணைப்பாளர்களுக்கு**

- சுகாதார அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச பயணிகள் எண்ணிக்கையைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். முன்னேற்றத்தின் அடிப்படையில் பேரூந்துகளில் பயணிக்க அனுமதிக்கப்படும் அதிகபட்ச பயணிகளது எண்ணிக்கை குறித்துச் சுகாதார அமைச்சினால் அறியத்தரப்படும்.
- . எந்த ஒரு பயணியும் பேரூந்தில் நின்றவாறு பயணம் செய்ய முடியாது.
- இரண்டு அல்லது மூன்று பயண ஆசனங்களைக் கொண்ட இருக்கை வரிசைகளில் இரண்டு பயணிகள் அருகருகே இருந்து பயணிக்காமல் இருப்பதனை உறுதிப்படுத்துக.
- சகல சாளரங்களும் திறக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதுடன் சொகுசு பேரூந்துகளில் வளிப்பதனாக்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதனை உறுதி செய்க.
- பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்
- பிரதான பேருந்து நிலையங்களில் கை கழுவும் வசதிகள் காணப்படுவதை உறுதி செய்யுங்கள்
- சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் தனிப்பட்ட கை தூய்மிப்பான் குடுவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்
- இயலுமாயின் பேரூந்தின் நுழைவாயிலில் கைதூய்மிப்பான் குடுவைகளைப் பொருத்துக.
- ஒவ்வொரு இரவும் அனைத்துப் பேருந்துகளும் சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யுங்கள். வழக்கமான தொற்றுநீக்கிகள் / சவர்க்காரம் மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி இதனைச் செய்யலாம்.
- பேரூந்தின் உள்ளே ஏறும்போதும் / அதிலிருந்து இறங்கும்போதும் , அதில் பயணிக்கும் போதும் கைகளால் மேற்பரப்புகளைத் தொடாமலிருக்கும் உத்திகளைப் பயன்படுத்துவதற்குப் போதுமான நேரத்தினை வழங்கவும் (அதாவது கையால் எங்கும் பிடிக்காமல் ஏறுவதற்கும் இருக்கையில் அமர்வதற்கும் உதவியாகப் பயணிகள் ஏறி அமரும்வரை காத்திருத்தல்).
- பேரூந்தினுள் ஒரு திசை வழிமுறையை *(unidirectional flow)* ஏற்படுத்துங்கள் - நுழைவதற்கும் வெளியேறுவதற்குமென குறிப்பிடப்பட்ட வாயில்களை மட்டும் பயன்படுத்துதல்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / சாரதியின் பொறுப்பு ஆகும்.

**பயணிகளுக்கு**

- ஒருவருக்கொருவர் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணியபடி பேருந்து நிலையத்தில் வரிசையில் காத்திருங்கள்.
- முகக்கவசத்தைச் சரியாக அணிய வேண்டும்.
- வசதிகள் காணப்பட்டால், பேருந்தில் நுழைவதற்கு முன்பு உங்கள் கைகளைச் சவர்க்காரம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை உபயோகித்தோ அல்லது கை தூய்மிப்பான்களைப் பயன்படுத்தியோ தொற்றுநீக்கம்

செய்யவும்.

- அருகருகே உள்ள இருக்கைகளில் அமராமல் பேருந்துக்குள் ஒரு மீற்றர் உடல் இடைவெளி பேணப்படுவதனை உறுதி செய்யுங்கள்.
- உங்கள் சொந்த பாதுகாப்புக்கருதி, அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகும் சந்தர்ப்பங்களில் அந்தப் பேருந்தில் ஏற வேண்டாம்.
- எடுத்துச் செல்லும் பைகள் மற்றும் பொருட்களை குறைவாகப் பேணவும்.
- இயலுமானவரை பேருந்துக்குள் இருக்கும் போது அலைபேசியினைத் தொடாமல் இருக்க முயற்சிக்கவும்.
- சரியான பயணக் கட்டணத்தினை வழங்குவதன் மூலம் பணத்தைக் கையாளுவதைக் குறைக்க முயற்சிக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் மேற்பரப்புகளை அவசியம் இன்றித் தொட வேண்டாம். உதாரணம். கைதாங்கிகள், இருக்கைகள், கதவுகள், சட்டகங்கள் போன்றவை.
- பேருந்தில் பயணம் செய்த பிறகு உங்கள் கைகளை சவர்க்காரமும் நீரும் பயன்படுத்தி ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு நன்கு கழுவிக் கொள்ளவும்.
- உங்களுக்கு மெலிதான சுவாச நோய் அறிகுறிகள் இருந்தாலும் பேருந்துகளைப் பயன்படுத்துவதனைத் தவிர்க்கவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- பொதுசனத் தொடர்பு ஊடகங்கள்.
- பிரதான பேருந்து நிலையங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல்களை மேற்கொள்ளல்
- அனைத்துப் பேருந்துகளின் நுழைவாயில்களிலும் பொருத்தமான அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்துதல்.



**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020